**TA6A**

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. : | | | | | | | | |

**6278–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

HUMAN RIGHTS LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Minorities means group of populations, which are less in numbers than majority community in a state. In this light, elaborately discuss the position of the rights of minorities under the international instruments as well as the Indian Laws with cited cases.

   சிறுபான்மையினர் என்பவர் மக்கள் தொகையின் ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள். மாநிலத்தின் பெரும்பான்மை சமூகத்தினை காட்டிலும் எண்ணிக்கையில் குறைவாகவே காணப்படுபவர்கள். இதன் விளைவாக பன்னாட்டு ஒப்பந்த ஆவணங்கள், இந்திய உள்நாட்டு சட்டங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளின் கீழ் சிறுபான்மையினரின் உரிமைகளின் நிலை என்ன என்பதினை விவரமாக எடுத்துரைத்து விளக்குக.

2. Many Articles of Part–III of Indian Constitution are the reflection of Magna Carta, Bill of Rights and Petition of Rights, what they are? How were these rights enforced through a numerous cases, decided by Supreme Court? Explain.

   இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பகுதி–IIIல் உள்ள ஷரத்துக்கள் மகாசாசனம், உரிமைகளின் மசோதா மற்றும் உரிமைகள் விண்ணப்பங்களினுடைய பிரதிபலிப்பாகவே அமைகிறது. அவைகள் என்ன? மற்றும் எவ்வாறு இவ்வுரிமைகளை உச்சநீதிமன்றம், பல்வேறு வழக்குகள் மூலம் நடைமுறைபடுத்தியுள்ளது என்பதினை விளக்குக.

3. Children are the future of every nation and vulnerable for exploitation. Critically evaluate the rights of children under United Nations Convention on Rights of Child and Constitution of India with case laws.

   குழந்தைகள் ஒவ்வொரு நாட்டினுடைய எதிர்காலமாக கருதப்படுகிறார்கள் மற்றும் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, ஐக்கிய நாட்டின் குழந்தைகளின் உரிமைகள் குறித்த ஒப்பந்தம் மற்றும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் உள்ள அவர்களுடைய உரிமைகளை வழக்குகள் கொண்டு விவரித்து மதிப்பீடு செய்க.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. The Indian Constitution bears the impact of Universal Declaration of Human Rights. Elucidate with case laws.

   இந்திய அரசமைப்புச் சட்டமானது பன்னாட்டு பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் சாசனத்தின் தாக்கத்தை தாங்கிப் பிடித்துள்ளது என்பதினை வழக்குகள் கொண்டு எடுத்துரைக்கவும்.

5. Who are prisoners of war? Explain the rights and duties of them with reference to Geneva Convention.

   பிணைய கைதிகள் என்பவர்கள் யார்? ஜெனிவா ஒப்பந்தத்திற்கிணங்க இவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து விளக்குக.

6. The Convention on the Elimination of Discrimination Against Women has emerged as a milestone in the journey of women's right. Critically comment with case laws.

   பெண்களுக்கு எதிரான பாகுபாட்டினை நீக்கும் ஒப்பந்தமானது அவர்களுடைய உரிமைப் பயணங்களின் ஓர் மைல் கல்லாகவே வெளிப்பட்டிருக்கிறது என்பதினை வழக்குகள் கொண்டு விமர்சித்து விளக்குக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

   (a) Classification of war crimes.

   போர் குற்றங்களின் வகைப்பாடுகள்.

   (b) Mohine Jawn (vs.) State of Karnataka–1992–3–SCC-666.

   மோகின் ஜாஃன் (எதிர்) கர்நாடக மாநிலம் – 1992–3–SCC-666.

   (c) Rights of the mentally retarded persons.

   மனவளர்ச்சி குன்றிய நபர்களின் உரிமைகள்.

   (d) Optional protocols to the International Covenant on Civil and Political Rights.

   சர்வதேச வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தத்தின் விருப்ப நெறிமுறைகள்.

   (e) UNESCO contribution to Right to Education.

   கல்வி உரிமைக்கு யுனஸ்கோவின் பங்கு.

   (f) How to enforce the Judgement of European Court of Human Rights?

   எவ்வாறு ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை நிறைவேற்றுதல்?

   (g) The role of UN High Commissioner for Human Rights.

   மனித உரிமைகளுக்கான பன்னாட்டு அகதிகளின் உயர் ஆணையரின் பணிகள்.

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A State Human Rights Commission of Orissa has awarded a compensation of Rs. 2,00,000 / (Two Lakhs) to one namely, Thiru. Aravinth for violation of human rights on the part of the police department after its enquiry, finalized and report submitted to the Government of Orissa. The state failed to award the compensation amount and implement that order within the stipulated time according to the Protection of Human Rights Act–1993. Hence the aggrieved person prefers a writ petition against non–implementation of that order in the High Court. Advise him.

காவல் துறையால் ஏற்பட்ட மனித உரிமை மீறலுக்காக ஒரிஸா மாநில மனித உரிமைகள் ஆணையம் விசாரணை மேற்கொண்டு பின்னர் திரு. அரவிந்த் என்பவருக்கு சுமார் 2 லட்சம் ரூபாய் நஷ்டஈடாக இம்மாநில அரசு வழங்கவேண்டி உத்திரவிட்டு அதன் அறிக்கையையும் அனுப்பிவைத்தது. இவ்வுத்தரவினை இம்மாநில அரசு தேசிய மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993ன் படி குறிப்பிட்ட காலத்திற்குள் இழப்பீட்டுத் தொகை வழங்காமல் நிறைவேற்ற தவறி விட்டதால் இதனை எதிர்த்து மேற்படியார் உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்ய முற்படுகிறார். அவருக்கு ஆலோசனை வழங்குக.

9. A street, which has a residents of 20 houses, is situated near the abandoned pond. The rain water is stagnated in the pond during the rainy season. Such stagnation of rain water breed mosquitoes and the foul smell emanate from the pond. Children are subjected to acute fever due to such breeding of mosquitoes from the stagnated water in the pond. No electric lamps burn at the said street for one month. Numerous complaints were was made to department of health and electricity board by one namely Mrs. Indhra, a Law student. In result no action was taken. Hence she prefers a public interest litigation, seeking a compensation for the violations of right to health. So advise to her.

சுமார் 20 குடியிருப்புவாசிகள் கொண்ட தெருவிற்கு அருகில் கைவிடப்பட்ட குளத்தில் மழைகாலங்களில் தேங்கிய நீர் மூலம் கொசுக்கள் அதிகளவில் உற்பத்தியாகியும் மற்றும் துர்நாற்றம் வீசப்பட்டதன் மூலம் இங்கு வசிக்கும் குழந்தைகள் காய்ச்சலால் அவதிபட்டார்கள். மேலும் இவ்விடங்களில் ஒரு மாத காலமாக மின்சார விளக்குகள் இல்லாததன் காரணமாக திருமதி. இந்திரா என்ற சட்டக்கல்லூரி மாணவி பலமுறை சுகாதாரத்துறை மற்றும் மின்சார துறையிடமும் புகார்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் சுகாதார பாதுகாப்பு உரிமை மீறலுக்காக நஷ்டஈடு கோரி பொது நல மனு தாக்கல் செய்ய விரும்புகிறார். அவருக்கு ஆலோசனை வழங்குக.

10. X is a qualified voter, but he was convicted and is undergoing imprisonment. In a parliamentary election he was not permitted to cast his vote, as per Sec. 62 (5) of the Representation of People Act, 1951. So he wants to challenge it before the court. Decide whether he will succeed?

X என்பவர் ஒரு தகுதிவாய்ந்த வாக்காளர், ஆனால் அவர் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் ஒரு நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 பிரிவு 62(5) – ன் படி மேற்படியாளர் வாக்கு அளிக்க தடைசெய்யப்படுகிறார். இதை அவர் நீதிமன்றத்தில் மறுதலிக்க விரும்புகின்றார். இதில் அவர் வெற்றிபெறுவாரா என்று தீர்மானிக்கவும்?

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA6B**

**6279–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

CRIMINOLOGY AND PENOLOGY

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the difference between Crime and Criminality.

   குற்றத்திற்கும், குற்றத்தன்மைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விளக்குக.

2. Crime is not due to a single cause but it has multiple causes – Discuss.

   தனி ஒரு காரணத்தால் குற்றம் நிகழ்வதில்லை ஆனால் இது பல காரணங்களால் நிகழ்கின்றன – விவாதிக்கவும்.

3. Explain the various views for the retention of capital punishment with the help of Supreme court cases.

   மரண தண்டனையை ஒரு தண்டனையாக வைத்திருப்பதற்கு ஆதரவாக கூறப்படும் பல்வேறு கருத்துக்களை உச்ச நீதிமன்ற வழக்குகளுடன் விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Criminals are born, not made" – Explain the Lombrosso's statement.

   "குற்றவாளிகள் பிறக்கின்றார்கள், உருவாக்கப்படுவதில்லை" – என்ற லம்ப்ரோசாவின் கூற்றினை விளக்குக.

5. Discuss the role of Judiciary in ensuring the rights of the victims.

   பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை உறுதி செய்வதில் நீதித்துறையின் பங்கினை விவாதிக்கவும்.

6. State the salient features of the Probation of Offenders Act, 1958.

குற்றவாளியின் நன்னடத்தைச் சட்டம், 1958ன் முக்கிய அம்சங்களை கூறுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Modern Crime.

நவீன குற்றம்.

(b) Blue-collar Crime.

செல்வாக்கற்றோர் குற்றம்.

(c) Bonger's Theory.

போங்கரின் கோட்பாடு.

(d) Parole.

நாணய விடுவிப்பு.

(e) Recidivism.

மறுகுற்ற மனப்பான்மை.

(f) Female Criminality.

பெண்பாலின குற்றங்கள்.

(g) Open air prison.

திறந்த வெளிச் சிறைச்சாலை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Police officer brings a 19 year-old boy to the police station for an enquiry. But he did not return home even at night. His body was recovered from the train tracts the next afternoon and identified by his mother. What justice can be done to the mother? Decide.

ஒரு காவல் அதிகாரி, 19 வயதுடைய ஒரு பையனை விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறார். ஆனால் அவன் இரவாகியும் வீடு திரும்பவில்லை. அடுத்த நாள் மதியம் அவருடைய உடல் இரயில் தண்டவாளத்திலிருந்து மீட்கப்பட்டு, அவருடைய தாயாரினால் அடையாளம் காணப்பட்டது. அவருடைய தாயாருக்கு என்ன நீதி வழங்க முடியும் என்பதனை தீர்மானிக்கவும்?

9. Mohana Krishnan had filed a mercy petition before the President of India. But the said mercy petition was not considered until 8 years. Thereafter, he filed a petition before the Supreme Court for the delay of 8 years in the disposal of the mercy petition. Whether he will succeed in his action. Decide with decided cases.

மோகன கிருஷ்ணன் என்பவர் இந்திய ஜனாதிபதியிடம் ஒரு கருணை மனுவினை தாக்கல் செய்திருந்தார். ஆனால் எட்டு வருடங்கள் ஆகியும், அக்கருணை மனுவானது கருத்தில் கொள்ளப்படாமல் இருந்தது. அதன் பிறகு, இவ்வாறான 8 வருடங்கள் கால தாமதத்தினை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவினை தாக்கல் செய்தார். இதில் அவர் வெற்றி பெறுவாரா? தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தீர்மானிக்க.

10. The boy was only 16 when he was convicted for theft of Rs.1,200/- which he had pickpocketed. He was sentenced to six months rigorous imprisonment and denied probation by the trial court and the High Court on the recommendation of the probation officer. Advise him.

ஒரு 16 வயதுடைய சிறுவன், ரூபாய் 1200/-ஐ பிக்பாக்கெட்டின் மூலம் திருடியதற்காக ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது மற்றும் நன்னடத்தை அதிகாரியின் பரிந்துரையின் பேரில் விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தால் நன்னடத்தை மறுக்கப்பட்டது. அவருக்கு அறிவுரை கூறவும்.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA6C** **6280–24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

INTELLECTUAL PROPERTY LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define Trademark. What are the remedies available for infringement of trademark?

   வணிகக் குறியீடு என்பதை வரையறை செய்க. வணிகக் குறியீடு உரிமை மீறலுக்கான தீர்வழிகள் என்ன?

2. What are the circumstances under which compulsory license can be granted and revoked under the Patent Act, 1970?

   இந்திய காப்புரிமைச் சட்டம், 1970ன் படி எந்த சூழ்நிலைகளில் கட்டாய உரிமம் வழங்கவும் மற்றும் அதனை திரும்பப் பெறவும் இயலும்.

3. What are the legal remedies available to the registered design holder under the Designs Act, 2000?

   வடிவமைப்பு சட்டம் 2000ன் படி பதிவு செய்யப்பட்ட வடிவமைப்பாளருக்கான சட்ட தீர்வழிகள் என்ன?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the concept of "deceptive similarity" with the help of decided cases.

   "ஏமாற்றுவகை ஒத்திருத்தல்" என்ற பதத்தினை முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் உதவியுடன் விளக்குக.

5. State the remedies for infringement of copyright.

   பதிப்புரிமை மீறுகை நேர்வில் அதற்குரிய தீர்வழிகளை கூறுக.

6. Define Geographical Indications. Discuss the problems and benefits associated with Geographical Indications Tag.

புவிசார் குறியீடு என்பதனை வரையறு. புவிசார் குறியீடு தொடர்புடைய பிரச்சனைகள் மற்றும் நன்மைகள் பற்றி விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write a short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Copyrights in design

வடிவமைப்பின் பதிப்புரிமை

(b) Tenure of Geographical Indications

புவிசார் குறியீட்டின் கால வரையறை

(c) Goodwill

வணிக நற்பெயர்

(d) Anton Piller order

ஆண்டன் பில்லர் ஆணை

(e) Surrender of patent

காப்புரிமை திருப்பி அளித்தல்

(f) Confidential information

மந்தணத் தகவல்கள்

(g) TRIPS Agreement.

டிரிப்ஸ் உடன்படிக்கை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Anand, a registered proprietor of design, alleges that Balu by unauthorisedly applying his said design, and he has gained profit substantially. Discuss the remedies available to Anand under the Designs Act, 2000.

ஆனந்த் என்பவர் ஒரு பதிவு பெற்ற வடிவமைப்பின் உரிமையாளர், “பாலு” என்பவருக்கு எதிராக, தனது வடிவமைப்பை “பாலு” என்பவர் சட்ட விரோதமாக பயன்படுத்தி பயன் அடைந்துள்ளார் எனக் குற்றம் சுமத்துகிறார். ஆனந்த் என்பவருக்கு வடிவமைப்புச் சட்டம் 2000ன் கீழே கிடைக்கக்கூடிய தீர்வழிகள் என்ன என்று விவாதிக்கவும்.

9. An artist is performing in a cinematographic film. Can she claim copyright over her performance?

ஒரு கலைஞர் திரைப்படம் ஒன்றில் தனது நடிப்பினை வெளிப்படுத்துகிறார். அக்கலைஞர் தன்னுடைய நடிப்பிற்கு பதிப்புரிமை கோர முடியுமா?

10. Anu has a footwear business with registered trademark "Saloni". Raju another trader started a business in footwear with the trademark "Shaloni". Anu wants to challenge Raju on the grounds of deceptive similarity. Decide.

அனு என்பவர் "சலோனி" ("Saloni") எனும் பதிவு செய்த வணிக முத்திரையுடன் காலணிகள் தொழில் செய்து வருகின்றார். ராஜு எனும் மற்றொரு விற்பனையாளர் "ஷலோனி" ("Shaloni") எனும் பெயரில் அதே காலணிகள் வியாபாரம் தொடங்குகிறார். ராஜுவின் செயலானது தனது வணிக முத்திரையை ஒத்த வியாபாரத் தன்மை உடையதாக உள்ளது என அனு வழக்கிட விரும்புகிறார். முடிவு செய்க.